நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் சமீபத்தில் மதுரையில் கூட்டுறவு நூற்பாலையின் கிளை ஒன்றினைத் துவக்கியுள்ளோம். அது மட்டுமல்ல திரு. இராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் அறிக்கை களை அரசு பரிசீலித்து வருகிறது. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு அதற்கென சட்டமுன்வடிவு இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடி வடைவதற்குள்ளாகவே கொண்டுவரவேண்டும் என அரசு முடிவெடுத்து அதற்காக தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஏற்றுமதி தீவிரமாக இருப்பதால் மாஸ்டர் வீவர்கள் நல்ல கூலிகளை வழங்கி வருகின்றனர். கடந்த 20 ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற கூலியை விட கூடுதல் அளவில் கூலி வழங்கப்படுகிறது. நெசவுத்தொழில் ஒரு சிறப்பான கட்டத்தை எய்தி வரும் இந்தச் சூழ்நிலையில் நெசவாளர்கள் கிளர்ச்சி, மறியல் போன்றவற்றில் ஈடுபட வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். எனவே இதற்காக அரசின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசிய மில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

(இ) சென்னை மேற்கு மாம்பலத்தில் நடைபெற்ற கலவரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை மேற்கு மாம்பலத்தில் 12-3-1979 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் தீ வைப்பு, கத்திக் குத்து, மத்திய போலீஸ் தடியடிப் பிரயோகம் ஏற்பட்டுள்ள தால் அந்தப் பகுதியில் மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலையைப் பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால், திரு. து. புருஷோத்தமன், திரு. துரை முத்துசாமி, திரு. கூத்தக்குடி ச. சண்முகம், திரு. மு. அம்பிகாபதி, திரு. சோ. அழகர்சாமி, திரு. செ. சிவசாமி, திரு. சேலம் மு. ஆறுமுகம். ஆகியோர் தீர்மானங் கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பதைச் மிகச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள் கிறேன்.

திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்: பேரவையின் மாண்புமிகு தலைவரவர்களே, சென்னை, தியாகராயநகர் பகுதி மேற்கு மாம்பலத்திலேயும் சைதாப்பேட்டை தொகுதி சைதாப் பேட்டையிலேயும் கடந்த ஒரு வார காலமாக சட்டமும் ஒழுங்கும் சீர் குலைந்து இருக்கிறது. அங்கே ஆளும் கட்சித் தொண்டர்கள் வேறு கட்சியினரைத் தாக்கியதன் காரணமாக பொதுமக்களிடையே பெரிய பீதியும், பதட்டமும் ஏற்பட்டிருக் கிறது. கடந்த 7ஆம் தேதி அன்று மேற்கு மாம்பலம் பிருந்தாவனம் காலனியில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் வீடு களில் ஆளும் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் புகுந்து அடித் திருக்கிறார்கள். சோடா புட்டிகளை வீசியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ஓடுகின்ற பேருந்துகள் அந்த வழிகளிலே செல்லாமல் வேறு வழியாகத் திருப்பி அனுப்பப்பட்டன.

அதுமட்டுமல்ல, சைதாப்பேட்டையில் உள்ள திரு. குமார் என்ற கழகத் தோழரின் வீட்டில் 15 பேர்கள் கத்தியுடனும், சைக்கிள் செயினுடனும் புகுந்து தாக்கி இருக்கிறார்கள். அவர்கள் பொதுமக்களையும் தாக்கியுள்ளார்கள்.

(முற்பகல் 10.50)

கடைகள் தாக்கப்பட்டு, சைதாப்பேட்டையில் கடையடைப்பு ஏற்பட்டு கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. மார்ச் 9-ம் தேதி 116-வது வட்டத்தில் மேற்கு மாம்பலத்தில் வட்டச் செயலாளர் எஸ். கே. சாமி, இளஞ்செழியன் மன்றச் செயலாளர் சீனிவாசன், கோவிந்தசாமி நினைவுமன்றத்தைச் சேர்ந்த காசிநாதன் இவர்களை ஆளும்கட்சித் தொண்டர்கள் சைக்கிள் செயினாலும் கத்தியாலும் தாக்கி சீனிவாசனுக்கும் காசிநாதனுக்கும் கத்திக் குத்து காயம் ஏற்படுத்தி அவர்கள் இருவரும் மருத்துவ மனையில் காவல்துறையினரால் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

அதே நேரத்தில் சைதாப்பேட்டையில் சாமி என்ற கழக நண்பர் தாக்கப்பட்டு அவரும் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருக்கிறார். 10-ம் தேதி இரவு திராவிட முன்னேற்றக் கழக பொதுக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதே 116-வது வட்டத்தில் ஏரிக்கரையோரத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பொதுக்கூட்டத்தை நடைபெறாதபடி தடுக்க கலாட்டா செய்து சோடா பாட்டில்களும் கற்களும் வீசப்பட்டு கூட்டம் நடை பெறமுடியாத அளவிற்கு செய்த பிறகு அதே சாலையில், அதே தெருவில் உள்ள நாஷனல் தியேட்டர் என்ற திரைப்பட அரங்கில் இந்த அராஜகத் தொண்டர்கள் நுழைந்து அங்குள்ள மக்களை குறிப்பாக பெண்களை தாக்கி திரைப்படக் காட்சி நடைபெறாத அளவிற்கு செய்திருப்பதும் எல்லாச் செய்தித்தாள்களிலும், தமிழ் ஆங்கிலச் செய்தித்தாள்களிலும் வெளிவந்துள்ளன. பிறகு 11-ம் தேதி இரவு, 12-ம் தேதி காலை சுமார் 2.30 மணிக்கு 116-ம் வட்ட செயலாளர் எஸ். கே. சாமி அவர்களின் சைக்கிள் கடையை இந்த அராஜகத் தொண்டர்கள் பெட்ரோல்

1979 மார்ச் 14] [திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்]

ஊற்றி கொளுத்தி ஏறத்தாழ ரூ. 15,000 பெறுமான அளவிற்குள்ள சைக்கிள்களுக்கும் இதரச் சாமான்களுக்கும் சேதம் ஏற்படுத்தி பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்,

இதுபற்றி மணி என்பவர் அசோக் நகர் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு பிராது கொடுத்திருக்கிறார். அங்கு வாச்மானாக இருப்பவர் ரோந்துவரும்போது துரைராஜ் மற்றும் ஐந்து பேர்களைக் குறிப்பிட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் பட்டாபி உட்பட, பிராது கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிராதின்மீது எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. 12ம் தேதி காலை இந்த மன்றத்தில் என் சக உறுப்பினராக இருக்கிற திரு. புருஷோத்தமன் அவர்களும் நானும் இங்கே இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த பிறகுதான் சென்னை காவல் துறையினர் விழிப்புண்டு இந்த இடங்களில் நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த மன்றத்தில் இந்தத் தீர்மானத்தைத் தாக்கல் செய்த பிறகுதான் இரண்டுபேர்களை ஜாமீனில் விடக்கூடிய செக்ஷனின்கீழ் கைது செய்து நேற்று கோர்ட்டில் ஆஜர் செய்திருக்கிறார்கள். சரியான விசாரணை நடைபெறவில்லை. சட்டம் ஒழுங்கு அங்கு சீரழிந்திருக்கிறது. அங்கு பதட்டமானதொரு நிலை நீடிக்கிறது. இரண்டு மூன்று தொகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்களிடையே பதட்ட நிலை பரவியிருக்கிறது. ஆகவே இதுபற்றி விரிவாக விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தலைநகரில், சென்னையில் கடந்த 7-ம் தேதியிலிருந்து 13-ம் தேதி வரை தொடர்ச்சியாக மேற்கு மாம்பலம் பகுதியில் கலவரங்கள் நடந்துகொண்டிருப்பதாக ஆங்கிலப் பத்திரிகைகளிலும் தமிழ்ப் பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக மேற்கு மாம்பலம் பகுதியில் நடைபெற்ற கலவரங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவருடைய கடை தீவைக்கப்பட்டிருப்பதாகவும், ஆட்கள் காயம் அடைந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. குறிப்பாக இதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதான எதிர்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே தாக்குதல்கள் நடந்ததாக பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன.

இதனுடைய முழுமையான உண்மைகளை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஆளும்கட்சியினர்களால் எதிர்கட்சியினர் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள், இதில் உண்மையிலேயே ஆளும்கட்சியினர் சிலர் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதைப்பற்றி பரிசீலிக்கவேண்டிய முக்கியமான பல

விஷயங்கள் இதில் இருக்கின்றன. ஏனென்றால் ஆளுகிற கட்சி என்கின்ற காரணத்தால் தவறு செய்யலாம் என்கின்ற உணர்வு வந்துவிடுமானால் அது ஆளும் கட்சிக்கே நல்லதல்ல. ஆளும்கட்சியினர் எதிர்கட்சியினரை தாக்கினால் தங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு உண்டு என்று எண்ணுவது ஆளும் கட்சிக்கு நல்லதாக அமையாது. இப்படிப்பட்ட ஒரு கலவரம் தமிழகத்தின் தலைநகரத்தில் நடக்கிறது. காவல் துறை இதை கட்டுப்படுத்தாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. மத்திய ரிசர்வ் போலீஸ் அழைக்கப்பட்டிருப்பதாகவும் பல்வேறு நிலைமைகள் நடந்திருக்கின்றன. பத்திரிகைகளில் பரபரப்பாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படி நகரத்திலேயே நடக்குமானால் கிராமப்புறங்களில் எப்படி நடக்கும் என்கின்ற பீதி மக்கள் மத்தியில் இருந்து கொண்டிருக்கிறது. இவைகளைப்பற்றியெல்லாம் விரிவாக விவாதிக்கவேண்டும் என்பதால் அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு யார் இதில் ஈடுபட்டார்கள் என்பதைப்பற்றியெல்லாம் விசாரிப்பதற்கு உயர் நீதி மன்ற நீதிபதியின் மூலம் விசாரித்தால்தான் உண்மை கிடைக்கும் என்பதால் இதை வலியுறுத்தி அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் மேற்கு மாம்பலத்தில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி எடுத்துக் குறிப்பிட்டார்கள். இந்த சம்பவங்கள் ஒரு தொடர் சங்கிலி போல் இருக்கின்ற காரணத்தால், அவைகளைப் படித்துவிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதி அதை படித்துவிடலாம் என்று கருதுகிறேன். அரசுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இவற்றை அவை முன் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சந்திரன் ஜெயபால் அவர்கள் குமார் என்பவர் தாக்கப்பட்டது பற்றியும் குறிப்பிட்டார். அது சம்பந்தமான விவரத்தையும் அவை முன் தெரிவிக்க விரும்புகிறேன்.

மைலாப்பூரில் ஆறுமுகம் கோஷ்டி என்றும் கபாலி கோஷ்டி என்றும் இரண்டு கள்ளச் சாராயக் கோஷ்டிகள் இருந்தன.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : சட்டமன்ற உறுப்பினர் கபாலி அல்ல என்பதையாவது தெளிவுபடுத்தவேண்டும்.

<u>திரு. டி. கே. கபாலி</u> : இதில் குறிப்பிடுகிற கபாலியை கள்ளச் சாராய கபாலி என்று குறிப்பிட்டால் சரியாக இருக்கும்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : இதில் எம். எல். ஏ. கபாலி என்று குறிப்பிடவில்லை. தொடர்ந்து அதைப் படிக்கிறேன். 1-9-78 அன்று மயிலாப்பூர் கபாலியை ஆறுமுகமும்

1979 மார்ச் 14] [திரு. ச. இராமச்சந்திரன்]

மற்றவர்களும் கத்தியால் குத்தியதாகவும் அது சம்பந்தமாக அபிராமபுரம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப் பட்டு. . (குறுக்கீடு) இந்தக் கபாலியை அல்ல..

திரு. சி. ஆறுமுகம் : இதில் ஆறுமுகம் என்று குறிப் பிட்டார்கள். யார், எந்த ஆறுமுகம் என்பதை தெளிவாக சொல்லிவிட்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுராந்தகம் ஆறுமுகம் என்று சொன்னால்தான் உங்களைக் குறிக்கும். இன்னார் மகன் இன்னார் என்று சொல்லிவிட்டால் சரியாய் இருக்கும்.

திரு. து. புருஷோத்தமன்: * * *

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1-9-78 அன்று மயிலாப்பூர் கபாலியை ஆறுமுகமும் மற்றவர்களும் கத்தியால் குத்தியது சம்பந்தமாக அபிராமபுரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு சைதாப்பேட்டை மாஜிஸ்ட்ரேட் கோர்டில் விசாரணை நடந்து வருகிறது. மயிலாப்பூர் ஆறுமுகம் தான் திருப்பி தாக்கப்படுவோம் என்ற அச்சத்தில் மயிலாப்பூர் பகுதியை காலி செய்துவிட்டு சைதையில் குடியேறினார். சைதையில் ஏற்கனவே இரு கள்ளச் சாராய கோஷ்டிகள் இருந்து வருகின்றன. ஒன்று, துரை, குமார் கோஷ்டி, இன்னொன்று கடும்பாடி கோஷ்டி, மயிலாப்பூர் ஆறுமுகம் துரை கோஷ்டியின் ஆதரவில் ஜாபர்கான் பேட்டையில் வசித்து வருகிறார். துரை கோஷ்டிக்கும் கடும்பாடி கோஷ்டிக்கும் முன்பே பகையுணர்வு இருந்து வந்துள்ளது. துரை கோஷ்டியினர் கடும்பாடி கோஷ்டியை 19-11-78 அன்று தாக்கியதாகவும் அது சம்பந்தமாக சைதை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. துரை கோஷ்டியினரும், கடும்பாடி கோஷ்டி யினரும் அ. தி. மு. க. என்று தங்களை கூறிவந்தனர். ஆனால் இந்தச் சம்பவத்திற்குப் பிறகு துரை கோஷ்டியினர் தங்களை தி. மு. க. என்று கூறி வந்தனர்.

[முற்பகல் 11.00]

மயிலாப்பூர் கபாலியினுடைய தூண்டுதலின் பேரில் கடும்பாடி கோஷ்டியினர் 8—3—79 அன்று துரை கோஷ்டியைச் சேர்ந்த குமார் என்பவரை கத்தியால் குத்தியதாகவும், அந்த வழக்கு சைதாப்பேட்டையில் பதிவு செய்யப்பட்டு ஆய்வில் இருந்து வருகிறது.

குமார் என்பவர் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் 10 தடவை களுக்கு மேலாக அபராதம் செலுத்தியவர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 மார்ச் 14

சந்திரன் என்கிற சின்னப்பையன் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். மயிலாப்பூர் ஆறுமுகமும், துரையும் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அசோக் நகர் 116-வது வட்டத்தில் தி. மு. க. வினருக்கும், அ. தி. மு. க. வினருக்கும் பகையுணர்வு வளர்ந்து வந்தது. இவ்வட்டத்தின் தி. மு. க. செயலாளர் எஸ். கே. சாமி, அ. தி. மு. க. அமைப்பாளர் பட்டாபி 27-2-79 அன்று நடைபெற்ற தி. மு. க. பொதுக் கூட்டத்தில் அ. தி. மு. க. விலிருந்து விலகிய சீனு என்கிற சீனிவாசன் தலைமை தாங்கினார். இக் கூட்டத்தில் பட்டாபி பற்றி கடுமையாக விமரிசித்ததாகவும், இதனால் இரு சாராருக்கும் இடையே மோதும் அளவிற்கு நிலைமை முற்றியது.

7 3–79 அன்று இரவு சமாதானப்படுத்துவதற்காக பட்டாபி என்ற அ. தி. மு. க. வைச் சேர்ந்தவர் இரு சாராரையும் மன்றத்திற்கு வர அழைத்தார். தி. மு. க. வைச் சேர்ந்த எஸ். கே. சாமி மட்டுமே வந்தார். தி. மு. க. வைச் சேர்ந்தவர்கள் வேறு யாரும் வரவில்லை. ஆகவே, பஞ்சாயத்து நடை பெறவில்லை. அப்போது திடீரென்று தம்பையா ரெட்டித் தெரு, பிருந்தாவன் சாலை சந்திப்பில் சோடா பாட்டில்கள் வீசப்பட்டன. காவல் துறை உடனே அங்கு சென்று நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். பிருந்தாவன் சாலை சந்திப்பில் தன் கடையிலிருந்த சோடா பாட்டில்களை வீசியதாக வேதாசலம் புகார் செய்தார்.

9-3-79 அன்று பட்டாபியும், அவரோடு சேர்ந்து 15 பேரும் தனது கடைக்கு வந்து சீனன் என்பவரைத் தாக்கியதாக தி. மு. க. எஸ். கே. சாமி புகார் செய்தார். தன் சைக்கிள் கடையையும் தாக்கியதாக புகார் செய்தார். சீனன் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். வழக்கு பதிவு செய்யப்பட்டு, ஆய்விலுள்ளது.

10-3-79 அன்று சீனனின் ஆதரவாளர்களான, தி. மு, க. வினர் என்று கூறப்படுகின்ற சுமார் 100 பேர்கள் இரவு 8.30 மணியளவில் லேக் வியூ ரோடு, ஈஸ்வரன் கோவில் தெருவில் பிருந்தாவன் சாலையில் கலகம் விளைவித்தனர். கோவிந்தன் என்பவரின் டீக் கடையை சேதப்படுத்தினர். டி. எம். சி. 1524 என்ற ஆட்டோ ரிக்ஷா சேதமாயிற்று. டிரைவர் மாணிக்கமும் காயமுற்றார். பரமசிவத்தின் வெற்றிலை பாக்கு கடைக்கும் சேதம் விளைவித்து மாட்டுக் கொட்டகைக்கு தீ வைக்க முயற்சித்தனர். லேக் வியூ ரோடில் உள்ள கான்டீன் டீயூப் லைட்டுக்கு சேதம் விளைவித்தனர். தியேட்டர் முன்னால் உள்ள டீக் கடையில் வேலை செய்யும் பாஸ்கரன் காயமுற்றார். இக்கலவரத்தில் 1 காவலர் காயமுற்றார். காவல்துறை தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தியது. கோவிந்தன் புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. காவல் துறை இப்பகுதியை தீவிரமாக கண்காணித்து வந்தனர்.

1979 மார்ச் 14] [திரு. ச. இராமச்சந்திரன்]

12–3–1979 அன்று 8.30 மணி அளவில் மூர்த்தி என்பவர் ஜோன்ஸ் ரோடு வழியாகப் போகும்போது பூங்காவனமும், மற்றும் 3 பேர்களும் சேர்ந்து புருவத்தையும், மீசையையும் மழித்து விட்டதாகவும், தன்னைத் தாக்கியதாகவும் புகார் செய்தார். மூர்த்தி பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

12–3–79 அன்று 3.30 மணியளவில் எஸ். கே. சாமி என்பவருடைய கடை தீப் பிடித்தது. மின்சாரக் கோளாறினால் தீப் பிடித்ததாக கூறப்படுகிறது. காவல் துறையினரும், தீயணைக்கும் படையினரும் விரைந்து தீயணைத்தனர். ரூ. 1,000 இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சோமநாதன் கொடுத்த புகாரின் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 7–3–1979 முதல் 10-3-1979 வரை இக்கலவரத்தின் காரணமாக 40 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது என்கிற காரணத்தால், அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி அமர்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மின்வாரியத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரக் கோளாறால்தான் கடை தீப்பிடித்தது என்று குறிப்பிட்டார்கள். அப்படி அவருக்கு ஒரு அறிக்கை தரப்பட்டிருக்கிறது. நான் இன்று காலையில் அந்தப் பகுதிக்குச் சென்று கலவரம் நிகழ்ந்த சில இடங்களைப் பார்த்து விட்டு கொளுத்தப்பட்ட, சேதமுற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் சாமி அவர்களுடைய கடையையும் பார்த்துவிட்டுத்தான் இந்த மன்றத்திற்கு வந்தேன். இன்று இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வருகிற காரணத்தால் அது பற்றிய விவரங்களை அமைச்சருக்குத் தரவேண்டுமென்ற எண்ணத்தோடு, டீக்கடை சேதப்படுத்தப்பட்டது அ. தி. மு. க. கட்சியைச் சேர்ந்தவருடையது என்று அறிக்கை தந்த போலீசார், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் சாமியின் கடை தாக்கப் பட்டது என்பதோடு முதல் குறிப்பில் நிறுத்திவிட்டு, இறுதிக் குறிப்பில் சொல்லும்போது அங்கு மின்சாரக் கோளாறு ஏற்பட்டு அதன் காரணமாக அது பற்றி எரிந்து விட்டது என்று குறிப் பிட்டிருக்கிறார்கள்.

நான் நேரில் பார்த்த வகையில் அந்தக் கடையின் கதவு உடைக்கப்பட்டு உள்ளே பெட்ரோல் ஊற்றப்பட்டு தீ வைக்கப் பட்டு அங்குள்ள சாமான்கள் எல்லாம் எரிந்துபோகும் காட்சியைப் புகைப்படம் மூலமாக அமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொடுத்திருக்கிறேன். ஆயிரம் ரூபாய் சேதம் என்று அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இப்போதே வேண்டு மானாலும் அவர் அலுவல்களை முடித்துவிட்டு அந்தப் பகுதிக்குச் சென்று அந்த இடத்தைப் பார்ப்பாரேயானால் போலீசார் எந்த அளவுக்கு உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்லியிருக் கிறார்கள் அல்லது சொல்லும்படி செய்யப்பட்டிருக்கிறார்கள்

என்பதைத் தெரிந்து கொள்ளமுடியும். ஏறத்தாழ பத்து அல்லது பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மேல் உடைமைகள் கொளுத்தப்பட் சேதமுற்று இருக்கின்றன. ஆயிரம் ரூபாய்தான் சேதம் என்ற பெயரிலே வந்திருக்கிற அறிக்கை மகத்தான தவறு, உண்மைக்கு மாறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக சென்னை மாநகரத்தில் இன்றைக்கு அமைதியற்ற ஒரு சூழ்நிலை பல மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியது போல் சட்டம் ஒழுங்கு இருக்கிறதா, செயல்படுகிறதா என்பது வினாக் குறியாக ஆகிவிட்ட சூழ்நிலை சென்னை மாநகரத்தில் ஏற்பட்டிருக்கிறது. சில சாராய சாம்ராஜ்ய அதிபதிகள் * * * * எல்லாம் காரில் ஏறிக்கொள்வது, எந்த இடத்திற்குச் செல்வது, எந்த இடத்தில் கொள்ளையடிப்பது என்று திட்டமிட்டுச் செல்கிறார்கள். போலீசார் தலையிட்டால் போலீசாருக்கே ஆபத்து விளைவிக்க முயற்சி செய்கிற நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

இந்த நிலைமை வளருமானால் தலைநகரத்தில் மாபெரும் புரட்சி ஏற்படக்கூடிய, பெரிய ரணகளம், அராஜகம் ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இதை விளையாட்டாக, சாதாரணமாகக் கருதாமல் அரசின் சார்பில் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடும் அக்கறையோடும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தினுடைய வரைமுறைகளை நன்கு அறிந்தவர்கள். நாம் இங்கே பேசுகிறபோது வெளியிலே இருப்பவர்களைப் பற்றிப் பேசலாம். ஆனால் குற்றச் சாட்டு சுமத்துவது சரியாகாது.

காரில் குறிப்பிட்ட சிலபேர் *** இதைப் போல் சட்ட விரோத காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்வதும் எளிது. இரண்டும் நம்முடைய மரபுக்கு ஏற்றதல்ல என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மின்சாரக் கோளாறு காரணமாக அந்தக் கடை எரிந்தது என்று சொல்வது 'It is reported'. அதைப் போல் தகவல் வந்திருக்கிறது என்று பொருளே தவிர 'It is proved' என்று சொல்லவில்லை. It is reported that it caught fire due to short circuit என்று.

ஆகவே, இவை எல்லாம் வழக்கு மன்றத்திற்கு வர இருக்கும் பிரச்சினைகள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

ஆகவே, இந்தக் குற்றச்சாட்டுக்கள் அவைக் குறிப்பில் இடம் பெறலாமா என்பதைப் பற்றித் தயவுசெய்து தாங்கள்தான் தீர்ப் பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதிலே கொஞ்சம் உணர்ச்சி வயப்பட்டுச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட பெயர்களை எல்லாம் நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : எதிர்க்கட்சித் தலைவர் உணர்ச்சி வயப்பட்டார் என்று தாங்கள் சொன்னதையும் நீக்கவேண்டும்.

[முற்பகல் 11.10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆறுமுகம், உட்காருங்கள்

திரு. சி. ஆறுமுகம் : எதிர்க்கட்சித் தலைவர் அவ்வளவு பொறுப்பு இல்லாது உணர்ச்சி வசப்பட்டு விட்டாரரோ, அதற்கு நீங்கள் தீர்ப்புக் கொடுக்கிறீர்களோ?

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. ஆறுமுகம் பொறுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு உணர்ச்சி இருப்பது ஒன்றும் குறைவானதல்ல உணர்ச்சி இருப்பவன் தான் மனிதன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களே சொல்லி விட்டார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அமைச்சர் அவர்கள் விளக்கத்திலே ஒரு பெயரைச் சொன்னார்கள். அந்தப் பெயரையும் எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் சொன்னதில் உள்ள அந்தப் பெயரையும் அவைக்குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிப்பதற்குத் தேவையில்லை என்பதால் அதற்கு அனுமதி மறுக்கிறேன்.

4. அமைச்சரின் அறிக்கை

சிம்கோ நிறுவன தகராறு குறித்து தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 7-3-1979 அன்று சட்டப் பேரவையின் அவைமுன்னவர் அவர்கள் அறிவித்தபடி, 8—3—1979 அன்று மாலை அனைத்துக் கட்சித் தலைவர்கள், அனைத்துத் தொழிற் சங்கத் தலைவர்கள் கொண்ட கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர்